# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

## CC NO. 266/2024

**Date** : 06.05.2026 **PW7/ LW6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | பரமசிவம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | ஆரியநத்தம் | வயது | 35 |
| எதிரிகள் 2,3,4,6,7,8 ஆஜர். எதிரிகள் 5,9 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் ஆரியநத்தம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என்னுடைய கையொப்பம் இல்லை. கடந்த 2021 ம் வருடம் ஒருநாள் நண்பகல் 12.00 மணியளவில் நான் ஆரியநத்தம் கிராமத்தில் உள்ள பழனி டீக்கடையில் இருந்தபோது போலிசார் அங்கு வந்து விசாரித்து அங்கு நடந்த சண்டை தொடர்பாக வரைபடம் வரைந்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றனர். ஆனால் தற்போது என்னிடம் காட்டப்படும் **அ.சா.ஆ 5 பார்வை மகசரில்** என்னுடைய கையொப்பம் இல்லை.

**அரசு தரப்பு சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக மாறியதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 தனலெட்சுமியைத் தெரியும். அவர் எங்கள் ஊரைச்சேர்ந்தவர். சாட்சி குப்புச்சாமி எனது அண்ணன். பழனி டீக்கடைக்கும் VAO அலுவலகத்திற்கும் இடையே சுமார் 200 அடி தூரம் இருக்கும். கடந்த 28.04.2021 அன்று மாலை 03.30 மணியளவில் நானும் எனது அண்ணன் குப்புசாமியும் எங்கள் ஊரில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்தபோது அ.சா.1 தனலெட்சுமியை இவ்வழக்கில் எதிரிகள் சண்டை வழக்கு சம்மந்தமாக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு

பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

**<u>எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னிடம் எழுதப்படாத வெள்ளைத்தாளில் தான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் அது சரிதான். நான் அந்த வெள்ளைத்தாளில் தமிழில் தான் கையொப்பம் செய்தேன். ஆங்கிலத்தில் கையொப்பம் இடவில்லை. நான் கையொப்பம் செய்த வெள்ளைத்தாளில் எனக்கு முன்னர் வேறு எந்த நபரோ கையொப்பம் செய்திருந்தாரா என்றால் இல்லை. நான் டீக்கடையில் நின்று கொண்டிருக்கும்போதுதான் போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றனர். அதன் பின்னர் போலிசார் என்னை ஏதும் விசாரணை செய்யவில்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

## CC NO. 266/2024

**Date** : 06.05.2025 **PW 8/ LW9**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | மணி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | ஆரியநத்தம் | வயது | 41 |
| எதிரிகள் 2, 3,4,6,7,8 ஆஜர். எதிரிகள் 5,9 ஆஜர் இல்லை. குவிமுச 317 மனு அனுமதிக்கபட்டது. எதிரி வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் ஆரியநத்தம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 தனலெட்சுமி எனது மனைவி. 1 வது எதிரி சக்கரை, 4 வது எதிரி பரமசிவம் ஆகிய இருவரும் எனது சித்தப்பா. 2 வது எதிரி ஆனந்தன், 3 வது எதிரி இளைய பெருமாள், 5 வது எதிரி சங்கர், 6 வது எதிரி செல்வம் ஆகியோர் எனது சித்தப்பா மகன்கள். 7 வது சகுந்தலா, 8 வது எதிரி பூபதி ஆகிய இருவரும் எனது சித்தி. 9 வது எதிரி ரீனா 2 வது எதிரி ஆனந்தனின் மனைவி. எங்கள் குடும்பத்துக்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் பல வருடங்களாக நிலம் தொடர்பாக முன்விரோதம் இருந்து வருகிறது. கடந்த 26.04.2021 அன்று மதியம் 01.30 மணியளவில் எனது தந்தை மணியும் எனது மனைவி தனலெட்சுமியும் எங்கள் ஊரில் உள்ள VAO அலுவலகத்திற்கு சென்று எங்களுக்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் பிரச்சினை உள்ள நிலத்தினை எதன் அடிப்படையில் 1 வது எதிரியின் பெயரில் பட்டா மாற்றம் செய்தீர்கள் என VAO விடம் கேட்டபோது VAO எதிரிகளுக்கு போன் செய்து அவர்களை வரவைத்தார். அப்போது எதிரிகள் VAO அலுவலகத்திற்கு வந்து என் மனைவி தனலெட்சுமியையும் எனது தந்தை மணியையும் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். உடனே எனது மனைவி என்னிடம் தொலைபேசியில் தகவலைத் தெரிவித்தார். நான் உடனே உளுந்தூர்பேட்டையிலிருந்து எங்கள் ஊருக்கு பேருந்தில் சென்று இறங்கி VAO அலுவலகத்திற்கு சென்று எதிரிகளிடம் கேட்டபோது, எதிரி ஆனந்தன், இளையபெருமாள், பரமசிவம் ஆகிய மூவரும் இரும்பு கம்பி , செங்கலால் எனது தலையின் பின்புறத்தில் அடித்தார்கள். எதிரி ஆனந்தன், இளையபெருமாள் ஆகிய இருவரும் என் குரல்வளையை நெறித்து கீழே தள்ளினார்கள். பின்னர் எதிரிகள் ஆனந்தன், இளையபெருமாள், பரமசிவம், சங்கர், செல்வம் ஆகியோர் மார்பிலும், முதுகிலும் மாறி மாறி அடித்தார்கள். நான் மயக்கமடைந்து விட்டேன். உடனே

என் தந்தை மணி எதிரிகளிடம் சண்டையைப்பற்றி கேட்டபோது எதிரி சக்கரை, இளையபெருமாள், சங்கர், செல்வம் ஆகியோர் கம்பியால் தலையின் முன்புறத்தில் அடித்தார்கள். பின்னர் அங்கிருந்த என் மனைவி தனலெட்சுமி, எனது தங்கை அனிதா, அனிதாவின் கணவர் ஆறுமுகம், எனது அக்கா மகள் ரம்யா ஆகிய நால்வரும் என்னையும் என் தந்தையையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்றார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது குடும்பத்தினருக்கும் எதிரி சக்கரையின் குடும்பத்தினருக்கும் பல வருடங்களாக நிலம் சமந்தமாக பிரச்சனை இருந்து வந்துள்ளது என்று சொன்னால் அது சரிதான். அந்த நிலம் சம்பந்தமாக திருக்கோவிலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் எதிரிகளுக்கு சாதகமாக தீர்ப்பு வந்துள்ளது என்று சொன்னால் அது சரியல்ல எங்களுக்கு சாதகமாக தான்தீர்ப்பு வந்துள்ளது. நான் கூறுவது தவறு என்று சொன்னாலோ எதிரிகளுக்கு சாதகமாக தீர்ப்பு வந்த காரணத்தினால் தான் பட்டாவானது எதிரி சக்கரையின் பெயரில் மாற்றப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. விஏஓ அலுவலகம் முன்னர் சண்டை எப்போது நடைபெற்றது என்றால் 26.04.2021 அன்று மதியம் 01.30 மணி அளவில் நடைபெற்றது. விஏஓ அலுவலகத்தில் இருந்து எதிரிகளுக்கு தகவல் சென்றதாக நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் எனக்கு தொலைபேசி மூலம் எனது மனைவி தெரிவித்தார். அங்கு நடைபெற்ற தகராறானது எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் அது சரி தான். எனது மனைவியும் எனது தந்தையும் கூறி தான் எனக்கு தெரிய வந்தது. எங்கள் தரப்பினருக்கும் எதிரிகள் தரப்பினருக்கும் விஏஓ அலுவலகத்திற்கு உள்ளே சண்டை நடைபெற்றதா அல்லது அலுவலகத்திற்கு வெளியே சண்டை நடைபெற்றதா என்றால் நான் சம்பவ இடம் சென்றபோது விஏஓ அலுவலகத்திற்கு வெளியே தான் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான் சம்பவ இடம் அடைந்தபோது விஏஓ அலுவலகம் பூட்டி இருந்ததா என்றால் இல்லை திறந்து தான் இருந்தது. நான் சம்பவ இடத்திற்கு வந்து இறங்கியபோது சம்பவ இடத்தில் எங்களது தரப்பில் நானும் எனது மனைவி, எனது அப்பா, எனது அக்கா மகள் ரம்யா, அவரது கணவர் ஆறுமுகம் ஆகியோர் இருந்தோமா என்றால் இல்லை நான் வந்தடைந்த போது நானும் எனது மனைவி மற்றும் அப்பாவும் தான் சம்பவ இடத்தில் இருந்தோம். சம்பவ இடமானது போக்குவரத்து மிகுந்த இடம் என்று சொன்னால் அது சரிதான். அதற்கு அருகில் வீடுகள் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். பிரச்சனை நடைபெற்ற போது பொதுமக்கள் யாரும் வந்து சண்டையை விலக்கி விடவில்லையா என்றால் சண்டை நடைபெற்ற போது ஆட்கள் யாரும் இல்லை சண்டை முடிந்த பின்னர் தான் கூட்டம் கூடியது. நானும் எனது மனைவி, எனது அப்பா, எனது தங்கை, எனது அக்கா மகள் ரம்யா மற்றும் அவரது கணவர் ஆறுமுகம் ஆகியோர் சேர்ந்து விஏஓ அலுவலகம் எதிரே எதிரிகளுக்கு எதிராக பிரச்சனை செய்தோம் என்று சொன்னால் அது சரியல்ல. எங்கள் இரு தரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்ட காரணத்தினால் கிராம நிர்வாக அலுவலர் அதற்கான தீர்வை

நீதிமன்றத்திற்கு சென்று பார்த்துக் கொள்ளும்படி எங்களை அலுவலகத்தில் இருந்து வெளியேற்றி விட்டார் என்று சொன்னால் அவர் அவ்வாறு சொல்லவில்லை பிரச்சனையை அவரே தீர்வு செய்து கொடுப்பதாக கூறினார், பின்னர் டிரான்ஸ்பர் ஆகி சென்றுவிட்ட காரணத்தினால் அடுத்து வந்த விஏஓ நீதிமன்றம் மூலம் தீர்வு காணும் படி எங்களிடம் கூறினார். எங்கள் தரப்பினர்தான் எதிரிகளை தாக்கி விட்டு எதிரிகள் எங்களை தாக்கி விட்டதாக கூறி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்று சொன்னாலோ தற்போது நீதிமன்றத்தில் எதிரிகள் தாக்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் எதிரிகள் தாக்கிய காரணத்தினால் மூன்று நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நான் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன் என்றால் மதியம் சுமார் 2 - 3 மணி அளவில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். நான் சிகிச்சைக்காக மதியம் சுமார் 1:30 மணி அளவில் மருத்துவமனைக்கு சென்றேன் என்று சொன்னாலோ நான் அங்கு உள் நோயாளியாக சிகிச்சை ஏதும் பெறவில்லை என்று சொன்னாலோ தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரி அல்ல. எங்கள் தரப்பில் எதிரிகளை தாக்கியதாக திருநாவலூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு அந்த வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் CC 186/2024 என்ற எண்ணில் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். அந்த வழக்கில் நானும் சுரேஷ், ஆறுமுகம், அனிதா, தனலட்சுமி ஆகியோர் எதிரிகளாக உள்ளோம் என்று சொன்னால் அது சரிதான். நாங்கள் ஐந்து பேரும் சேர்ந்து கொண்டு எதிரிகளை தாக்கி விட்டு தற்போது எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாருக்கு அனுசரனையாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னை ஏதும் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. சண்டை தொடர்பாக எங்களது தரப்பில் காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் எனது மனைவி தனலட்சுமி புகார் கொடுத்தார். என்றைக்கு கொடுத்தார் என்றால் 26.04.2021 அன்று புகார் அளித்தார் நேரம் என்ன இருக்கும் என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அந்த புகார் சம்பந்தமாக போலீசார் எப்போது விசாரணை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் மருத்துமனையில் சிகிச்சையில் இருந்ததால் எனக்கு அந்த விவரம் தெரியாது.

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

CC NO. 266/2024

Date : 06.05.2025 PW 9/ LW10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | ஆதிகேசவன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | ஆரியநத்தம் | வயது | 80 |
| எதிரிகள் 2, 3,4,6,7,8 ஆஜர். எதிரிகள் 5,9 ஆஜர் இல்லை. குவிமுச 317 மனு அனுமதிக்கபட்டது. எதிரி வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் ஆரியநத்தம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 தனலெட்சுமி எனது மருமகள். 1வது எதிரி சக்கரை எனது சகோதரன். 4 வது எதிரி பரமசிவம் எனது சித்தப்பா மகன். 2 வது எதிரி ஆனந்தன், 3 வது எதிரி இளைய பெருமாள், 5 வது எதிரி சங்கர், 6 வது எதிரி செல்வம் ஆகியோர் எனது தம்பி மகன்கள். 7 வது சகுந்தலா, 8 வது எதிரி பூபதி ஆகிய இருவரும் எனது தம்பி மனைவி. 9 வது எதிரி ரீனா 2 வது எதிரி ஆனந்தனின் மனைவி. எங்கள் குடும்பத்துக்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் பல வருடங்களாக நிலம் தொடர்பாக முன்விரோதம் இருந்து வருகிறது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மதியம் 01.00 மணியளவில் நான் எங்கள் ஊரில் உள்ள VAO அலுவலகத்திற்கு சென்று எங்களுக்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் பிரச்சினை உள்ள நிலத்தினை எதன் அடிப்படையில் 1வது எதிரியின் பெயரில் பட்டா மாற்றம் செய்தீர்கள் என VAO விடம் கேட்டபோது அப்போது எதிரிகள் VAO அலுவலகத்திற்கு வந்து எதிரி ஆனந்தன் தடியால் என்னை தலையில் அடித்தார். செல்வம் செங்கலால் தலையில் பின்பகுதியில் அடித்தார். தம்பி சக்கரை தடியால் எனது இடுப்பில் அடித்தார். நான் மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டேன். அதன் பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு வந்தோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கும் எனது தம்பி சக்கரை குடும்பத்திற்கும் சொத்து தொடர்பான பிரச்சனை வெகு நாட்களாக இருந்துக் கொண்டு வருகிறது என்று சொன்னால் சரிதான். நான் விஏஓ அலுவலகம் செல்வதற்கு முன்னரே எதிரிகள் அங்கு இருந்தார்களா என்றால் அவர்கள் அங்கு இருப்பதைக்

கேள்விப்பட்டு தான் நான் விஏஓ அலுவலகத்திற்கு சென்றேன். விஏஓ அலுவலகத்திற்கு நான் தனியாக தான் சென்றேன்.எனது மருமகள் மகன் பேத்தி, ஆறுமுகம் அவர்கள் அதன் பின்னர் தகவல் கேள்விப்பட்டு தான் அங்கு வந்தனர். எங்களுக்கும் எதிரிகளுக்கும் விஏஓ அலுவலகத்திற்கு வெளியே கோவிலுக்கு முன்னாடி தான் பிரச்சனை ஏற்பட்டது. ஊர்மக்கள் யாரேனும் சண்டையை தடுத்தனரா என்றால் இல்லை. சண்டை நடைபெற்ற போது நான் மயக்கம் அடைந்து கீழே விழுந்து விட்டேன். அதன் பின்னர் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எத்தனை மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன் என்றால் மாலை சுமார் 3 மணி அளவில் சிகிச்சைக்காக சேர்ந்தேன் அங்கு சுமார் ஒரு வார காலம் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். எங்கள் தரப்பில் எதிரிகளை தாக்கியதாக திருநாவலூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு அந்த வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் CC 186/2024 என்ற எண்ணில் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். அந்த வழக்கில் நானும் சுரேஷ், ஆறுமுகம், அனிதா, தனலட்சுமி ஆகியோர் எதிரிகளாக உள்ளோம் என்று சொன்னால் அது சரிதான். நாங்கள் ஐந்து பேரும் சேர்ந்து கொண்டு எதிரிகளை தாக்கி விட்டு தற்போது எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாருக்கு அனுசரனையாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். வழக்கு சம்பந்தமான புகார் யார் கொடுத்தது என்றால் எனது மருமகள் கொடுத்திருப்பார், ஆனால் எனக்கு தெளிவாக தெரியவில்லை. சண்டை தொடர்பாக போலீசார் ஊரில் விசாரணை செய்தார்களா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னாலோ எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யான புகார் கொடுத்து அதற்கு அனுசரணையாக நான் தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.